# அண்ணாவின் இருமொழிக் கொள்கை; தமிழ்நாட்டிற்கு எப்போதும் தேவை!

இந்தியா ஒரு தேசமல்ல, பல நாடுகளின் ஒன்றியமே (Union of States) என்பது இந்திய அரசியல் சாசனத்தின் முகவுரை பறை சாற்றும் வரலாற்று உண்மையாகும். இதற்கு மாறாக மொழி வழித் தேசிய இனங்களின் மொழிப் பாதுகாப்பிற்கும், அதன் தனித்தன்மைக்கும் எதிராக இன்றைய பா.ஜ.க., ஆர்.எஸ்.எஸ்., தங்களது இன மொழிகளான இந்தியையும், வடமொழியையும் தமிழக மக்கள் மீது 'ஒரே நாடு' 'ஒரே மொழி' என்ற கொள்கையின் அடிப்படையில் ஆட்சியிலும், நிர்வாகத்திலும், கல்வியிலும், வேலையிலும் திணித்தால் பிற மொழி வழி மாநிலங்கள் அந்நியமாக்கப்பட்டு, இந்தியன் என்ற பொது உணர்வு அழிக்கப்பட்டு, தனி நாட்டு மொழி உணர்வு ஓங்கி ஒலிக்கப்படும் நிலை உருவாக்கப்பட்டு விடும்.

இந்தியா போன்ற பல்வேறு சாதி, மத, இன, மொழி அடிப்படையில் அமைந்த ஒரு நாட்டில் அனைத்தையும் சமமாக நடத்த வேண்டியது ஜனநாயகத்தின் அடிப்படைப் பண்பாகும். இதில் சிறுபான்மை, பெரும்பான்மை என்ற வாதம் சொத்தையானதாகும்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் கூறியதை இங்கு எடுத்துக் காட்டுவது சாலச்சிறந்ததாகும். அதாவது நாடு முழுவதும் காகங்கள் எண்ணற்ற வகையில் வானத்தில் உள்ள நட்சத்திரங்களைப் போல் பரந்து விரிந்து வாழ்ந்து வருகின்றன. எண்ணிக்கை யில் ஏராளமாகக் 'காகங்கள்' இருந்தாலும், இந்திய நாட்டின் தேசியப் பறவை 'மயில்' தான் என்பது தீர்க்கமான முடிவு.

தமிழ் தொன்மைக்கும், இலக்கண, இலக்கியச் செறிவிற்கும் சான்றாய் உலக மொழிகளில் முன்னிற்கின்றது. தமிழ் இன்று உலக மொழிகளில் ஒன்று என்பதை எவரும் மறுத்துக் கூற இயலாத நிலையில் தமிழ்ப் பகைவர்கள் உள்ளனர்.

அன்றாட வாழ்வியலில் வழக்கொழிந்த கிரேக்கம், ரோமம், வடமொழி (சமஸ்கிருதம்) போன்றவை போலில்லாமல், தமிழ் மொழியை இன்றளவும் எந்த மொழியின் துணையுமின்றிப் பேசவும் எழுதவும் முடியும். இதைப் பதினெட்டு மொழிகளைக் கற்றுணர்ந்து ஆய்வு முடிவாக ஆங்கில அறிஞர் இராபர்ட் கால்டுவெல் உலகிற்கு அறிவித்துள்ளார். இதை உலக மொழியியல் அறிஞர்கள் நன்கு அறிவர்.

இதன் காரணமாகத்தான் மகத்தான மனிதர், கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்கள் இந்திய அரசியல் நிர்ணய சபையில் மொழிப் பிரச்சினை வரும்பொழுது 'தமிழ் மொழி'யை இந்தியாவின் தேசிய மொழியாக அறிவிக்கும்படி வாதாடினார் என்பது குறிப்பிடத்தக்க வரலாற்று உண்மையாகும்.

வடநாட்டுத் தலைவர்களில் இந்தி பேசும் மாநிலத்தவர்கள் இந்தியைத் தேசிய மொழியாக அறிவிக்கக் கூறினர். ஆனால், அலுவலக மொழியாக இந்தி ஏற்றுக்கொள்ளப்பட்டது என்றாலும் இந்தி தேசிய மொழி அன்று என்பது குறிப்பிடத்தக்கது.



**சைதை சாதிக்**
**தலைமைக் கழக சொற்பொழிவாளர்**

இந்திய மக்கட்தொகை 2001ல் 120 கோடியாகும். இதில் இந்தி மொழி பேசுவோர் 42 கோடியாகும். மேலும், 'ஆரியவர்த்தா' என்று அழைக்கப்பட்ட மத்தியப் பிரதேசம், உத்தரப் பிரதேசம், ராஜஸ்தான், பீகார், இமாச்சலப் பிரதேசம் போன்றவற்றில் 6 கோடி மக்கள் பிற மொழிகளைப் பேசி வருகின்றனர்.

### இந்தியா என்றால் இந்தி இல்லை.

இந்தியா என்றால் இந்தி என்பது வரலாற்று உண்மைக்குப் புறம்பானது. புதிதாகத் தோன்றியுள்ள மாநிலங்களான உத்தர் கண்ட், ஜார்க்கண்ட், சத்தீஸ்கர் போன்றவை தனித்தனியே இலக்கியம், இலக்கணம், எழுத்துக்களைக் கொண்ட மொழிகளைப் பெற்றுள்ளன.

மைதிலி என்ற மொழியை 4 கோடி மக்கள் பேசுகின்றனர். சந்தாலி மொழி பேசுபவர்களையும் இந்தியோடு சேர்த்துள்ளனர். ஆனால் 2003ஆம் ஆண்டு 8வது அட்டவணையில் அதற்குத் தனி அலுவல் மொழி அந்தஸ்து கொடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல் போஜ்புரி மொழியை உ.பி.யிலும், பீகாரிலும் 15 கோடி மக்கள் பேசி வருகின்றனர்.

கடந்த காலத்தில் உத்தரப் பிரதேசம் (United Province) இணைக்கப்பட்ட பிரதேசங்கள் என்றும், மத்தியப் பிரதேசம் (Central Province) மையப் பிரதேசங்கள் என்றும் அழைக்கப்பட்டன. ஆக, அப்பெரும் மாநிலங்கள் ஒட்டுமொத்தமாக இந்தி பேசும் மாநிலங்கள் அல்ல என்பது உண்மை.

கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவில் நுழைந்த பொழுது இன்றுள்ள இந்தி மொழி இல்லை. பீகாரைக் கிழக்கிந்தியக் கம்பெனியார் வடக்கு எல்லைப் பிரதேசங்கள் (North Frontier Province) என்றனர். உண்மையில் அப்பிரதேசத்தில் முக்கியமாக நான்கு பெரும் மொழிகளைப் பேசி வருகின்றனர். அம்மொழிகள் யாவும் சொந்த எழுத்துக்களைக் கொண்டிருந்தன என்பது வரலாறு.

தென்னிந்திய மொழிகள் திராவிட மொழிகளாகும். வடமொழியான சமஸ்கிருதத்திற்கும், திராவிடத் தமிழ் மொழிகளுக்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை.

இந்தியாவின் பூர்வீக மொழி தமிழும், இதர திராவிட மொழிகளும். இவையாவும் தனி இலக்கிய இலக்கணங்களைக் கொண்டுள்ளன.

ஆக, இந்தியா என்பது இந்தி அல்ல என்பது வரலாறு நிறுவும் உண்மையாகும். அப்படியிருக்கையில், இந்தி மொழி இந்தியாவின் தேசிய மொழி என்றும், அலுவல் மொழி என்பதும் இந்தியாவைச் சிதறடித்து விடுமோ என்ற ஐயம் தோன்றுகிறது.

பாகிஸ்தான் தனது 'உருது' மொழியை அன்றைய கிழக்கு பாகிஸ்தானில் புகுத்தியது. இதை கிழக்கு பாகிஸ்தானியர்களான 'வங்காள மொழியினர்' எதிர்த்தனர். எனவே, பாகிஸ்தானிலிருந்து தனிநாடாகப் பிரிந்தனர். 'வங்காள மொழி' பிரித்துவிட்டது. மேற்கு கிழக்கு பாகிஸ்தான் ஒரே மதமான இஸ்லாமாக இருந்தாலும் மொழிப் பிரிவு அவர்களைப் பிரித்துத் தனி நாடாக மாற்றிவிட்டது.

### மாநிலங்களின் அடையாளங்களை சிதைக்கும் தேசியக் கல்விக் கொள்கை.

ஒருவர் அவரின் தேவைக்கேற்ப எத்தனை மொழிகள் வேண்டுமானாலும் கற்றுக் கொள்ளலாம், அது அவர்களின் உரிமை சார்ந்தது. ஆனால் இந்தியைக் கட்டாயம் கற்றே ஆக வேண்டும் என்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இந்திய ஒன்றிய அரசின் இறுதி இலக்கு என்பது "ஒரே நாடு ஒரே மொழி" என்ற அடிப்படையில் இந்தியாவின் பொது மொழியாக இந்தியைக் கொண்டு வந்துவிட வேண்டும் என்பதே. இந்தியை ஏற்றுக் கொண்ட வட மாநிலங்கள் குறிப்பாக குஜராத், உ.பி, பீகார் கூடத் தங்களது தாய்மொழியை மறந்து, இந்திக்கு அடிமையான நிலையைப் பார்க்கிறோம். அந்த நிலை தமிழ்நாட்டிற்கோ, தமிழுக்கோ வந்துவிடக் கூடாது என்பதாலேயே, இங்கு இந்தி எந்த வடிவத்தில் திணிக்கப்பட்டாலும், அதைத் கழக அரசு தீவிரமாக எதிர்க்கிறது. மேலும் உயர் கல்வியைப் பொறுத்தவரை இந்தியாவின் எந்த மாநிலத்தையும்விட தமிழ்நாடு முன்னிலை வகிக்கிறது என்பதைப் பல்வேறு புள்ளி விவரங்கள் உணர்த்துகின்றன.

மேலும், மாநிலங்களின் அடையாளங்களை, வரலாற்றை, பண்பாட்டை என அனைத்தையும் தேசியக் கல்விக் கொள்கை சிதைக்கவே செய்யும் என்பதையும் அறியலாம்.

பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு உயர்கல்விக்குச் செல்லும் மாணவர்களின் நிலை 26.3 விழுக்காடாக உள்ளது. அதுவே உ.பி, பீகார் போன்ற மாநிலங்களில் 20 விழுக்காடுகளுக்கும் குறைவாகவே உள்ளன. ஆனால் தமிழ்நாடு சில வளர்ந்த நாடுகளை விடக் கூடுதலாக 51.4 விழுக்காடு என்ற அளவில் உள்ளது. 2035இல் இந்தியாவின் இலக்கே, 50 விழுக்காடு என்ற அளவில் தான் உள்ளது.

ஆகையால் தமிழ்நாட்டுக் கல்வி முறை என்பதோ, மொழிக் கொள்கை என்பதோ சிறந்த மாணவர்களை உருவாக்கப் போதுமானதாக உள்ளது. தேவைப்படும் அளவில். இன்னும் கூடுதல் தரத்துடன் கல்வியாளர்கள் குழுவைக் கொண்டு தரமான கல்விச்சூழலை மாணவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கை உள்ளது. ஒன்றிய அரசின் தேசியக் கல்விக் கொள்கையைத் தேவைப்படும் மாநிலங்கள் பயன்படுத்திக் கொள்ளட்டும். கல்வியில் சிறந்த தமிழ்நாட்டிற்குத் தேவையில்லை என்பதே தமிழர்களின் பொதுக் கருத்தாக உள்ளது.

### இந்தி பேசும் மாநிலங்களைவிட அனைத்து துறைகளிலும் முன்னிலை வகிக்கிறது தமிழ்நாடு

2022ஆண்டுக்கான இந்தியாவின் சிறந்த நூறு கல்வி நிறுவனங்களின் ரேங்க் பட்டியலை ஒன்றிய அரசின் மனித வள மேம்பாட்டுத் துறை (HRD) வெளியிட்டுள்ளது. அந்த பட்டியலின் படி,

முதல் 100 சிறந்த கல்லூரிகளில் 37 கல்லூரிகள் இருப்பது தமிழ் நாட்டில்.. பி.ஜே.பி. பல ஆண்டுகளாக ஆளும் மோடியின் மாடல் மாநிலம் குஜராத்தில் இருபத்தோ வெறும் மூன்றுதான். இதேபோல ஹிந்தி பெல்ட் மாநிலங்களான மபி, உபி, பிகார், ராஜஸ்தான் போன்றவற்றிலிருந்து ஒன்றுகூட இந்த பட்டியலில் இடம் பிடிக்கவில்லை.

முதல் 100 சிறந்த பொறியியல் கல்லூரிகளில், தமிழ் நாடு 22 ; குஜராத் 5 ; ம.பி 3 ; உ.பி 6 ; பீகார் 1; ராஜஸ்தான் 3.

முதல் 100 சிறந்த பல்கலைகழகங்களில்

தமிழ் நாடு 24 ; குஜராத் 2 ; ம.பி 0 ; உ.பி 7 ;

பீகார் 0 ; ராஜஸ்தான் 4

### ஹிந்தி கற்கவில்லை என்பதற்காக நிதி தர மறுப்பது அறமா?

**இந்தி பேசும் மாநிலங்களைவிட அனைத்து துறைகளிலும் முன்னிலை வகிக்கிறது தமிழ்நாடு**

**மேற்கு முனைச் சூரியனை தெற்கு தனதாக்கிக் கொள்வது எப்போது?**

**தமிழினமே எச்சரிக்கை!**

**ஒருமைப்பாட்டைக் குலைக்கும் அமித்ஷா பரிந்துரை!**

**இந்தி தெரியாது போடா!!**

**இந்தியாவின் ஒற்றை மொழி இந்தி அல்ல; 'இந்து' என்போரின் ஒற்றை மொழியும் சமஸ்கிருதம் அல்ல**

**நஞ்சுண்டு மாண்ட கீரனூர் ந.முத்து**

**இந்தியாவை இந்திமொழிமயமாக்கும் பா.ஜ.க. மோடி அரசின் வல்லாண்மை**

**இந்தி திணிப்பின் பொருள்முதல் அடிப்படையும் இந்தியாவின் வளர்ச்சி முன்னேற்றமும்**

**தமிழ்நாட்டில் நீட்டைத் திணிப்பது,நாட்டின் முன்மாதிரிக் கல்விமுறையைப் பாதிக்கும்!!**

**ஹிந்தி தெரியவில்லை என்பதற்காக வேலை தர மறுப்பது அறமா?**

**நா.வெங்கடேசன் பிரிவு: கட்டுரைகள் வெளியிடப்பட்டது: 10 ஏப்ரல் 2024**

ஹிந்தி தெரியவில்லை என்றால் "விரைவில் கற்றுக்கொள்ளுங்கள்" என்று கூறாமல், "உனக்கு இங்கு வேலை இல்லை" என்று சொல்லும் வட இந்திய நிறுவனங்களை கண்டிக்காமல், ஹிந்தி தெரியாததை ஒரு தேசிய குற்றம்போல் பேசிக் கொண்டிருக்கிறார் டாக்டர் தமிழிசை (https://www.facebook.com/share/v/QYR6vk94x3HGmbvi/?mibextid=w8EBqM).

தமிழ்நாட்டில் தமிழ் தெரியாமலேயே ஒன்றிய அரசு அலுவலகங்களில் ஹிந்தி மட்டுமே தெரிந்த இந்தியர்களை நாம் அனுமதிக்கிறோமே! இதற்கு என்ன சொல்லப் போகிறார்?

தமிழ் கற்றுக் கொண்டவர்களுக்கு மட்டுமே இங்கு வேலை என்று சொல்லி அவர்களை அனுப்பி விடலாமா?parveen sultana and thamilisaiதமிழ்நாட்டில் பல தனியார் நிறுவனங்களிலும் ஹிந்தி மட்டுமே தெரிந்த, தமிழ் தெரியாத வட இந்திய பணியாளர்கள் பணிக்கு அமர்த்தப்பட்டு இங்கு வந்து தமிழை கற்றுக் கொள்கிறார்கள். தமிழ் தெரியவில்லை என்பதற்காக அவர்களை நாம் புறக்கணிப்பதில்லை.

பல துறைகளிலும் வட இந்திய தொழிலாளர்கள் தமிழ்நாட்டிற்கு சாரை சாரையாய் தமிழ் தெரியாமல் வருகிறார்கள். கட்டிடப் பணி உள்ளிட்ட பல வேலைகளில் அவர்கள் ஈடுபடுத்தப்படுகிறார்கள். அவர்களுக்கு தமிழின் அடிப்படையே தெரியாது. அப்படி இருந்தும் அவர்களை நாம் அனுமதித்து ஏற்றுக் கொள்கிறோம்.

இந்திய நாட்டின் மூத்த மொழியான தமிழை அறியாமலேயே இந்திய நாட்டின் தலைமைப் பொறுப்புக்கு வரும் தலைவர்களை தமிழ்நாட்டில் இன்முகத்தோடு வரவேற்கிறோம்.

அந்தத் தலைவர்கள் அரைகுறையாக 'வணக்கம், நன்றி' என்று கூறுவதை பார்த்து மகிழ்ந்து விரைவிலேயே தமிழை கற்றுக் கொண்டு விடுவார்கள் என்று நம்புகிறோம். ஆனால் அந்த தலைவர்கள் ஒருபோதும் தமிழை கற்றுக் கொள்வதில்லை. நமது திருக்குறளையும், சங்க இலக்கியத்தையும், பாரதியையும் காலம் காலமாக பிழையாகவே மேடைகளில் வாசித்து தமிழர்களை வாக்கு வங்கியாக மட்டுமே பார்ப்பதை கண்டு வருத்தப்பட்டு நிற்கிறோம். அவர்கள் யாரும் தமிழை கற்றுக் கொள்ள சிறு முயற்சி கூட எடுத்ததாக தெரியவில்லை.

தமிழ்நாட்டுக்கு வரும் எந்த ஆளுநர்களும் தமிழ் மொழியை தெரிந்து கொண்டு ஆளுநர் மாளிகைக்கு வருவதில்லை. அத்தனை ஆளுநர்களையும் அன்போடு வரவேற்று இருக்கிறது தமிழ்நாடு. தமிழ் தெரியாத ஆளுநர்தான் தமிழ்நாட்டின் அத்தனை பல்கலைக்கழகங்களுக்கும் வேந்தராக அலங்கரிக்கப்படுகிறார்.

ஏதோ ஒரு வட இந்திய தனியார் நிறுவனம் இந்தியாவின் மூத்த இனத்தைச் சேர்ந்த ஒருவருக்கு வேலை தரவில்லை என்பதற்காக தமிழர்கள் யாருக்கும் வேலையே கிடைக்கப் போவதில்லை. இந்தி தெரிந்து கொண்டால் மட்டுமே இந்தியாவில் வசிக்க முடியும் என்பது போன்ற நம்பிக்கைகளை தமிழ்நாட்டில் விதைத்து, தமிழர்களின் தன்னம்பிக்கையை சீர்குலைப்பதைத் தான் இந்தித் திணிப்பு என்று கூறுகிறோம்.

வெள்ளைக்காரர்கள் இந்தியாவை ஆண்ட போது கூட தமிழ்நாட்டின் அத்தனை அலுவலகங்களிலும் தமிழ் இருந்தது. இன்று நம்மை நாமே ஆளுகிறோம். ஆனால் ஒன்றிய அரசு அலுவலகங்களில் தமிழை நிலைநிறுத்த போராட வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

நாம் உலகம் முழுவதும் தமிழை பரப்புகிறோம். அதற்காக எந்த நாட்டிடமும் சென்று உங்கள் பள்ளிகளில் தமிழை ஒரு மொழியாக கற்றுக் கொடுங்கள் என்று கூச்சலிடுவதில்லை. மாறாக தமிழ்ச்சங்கம் வைத்து நமது நிதியை கொண்டு தமிழை பரப்புகிறோம். உலகெங்கும் உள்ள தமிழ் பள்ளிகளுக்கு தமிழ் நாடு அரசு பாடநூல்களை அனுப்பி வைக்கிறது.

ஹிந்தி மொழியை தமிழர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் என்று ஹிந்தி பேசும் மாநில அரசுகள் விரும்பினால் ஹிந்தி பரப்புரையை தமிழ்நாட்டில் செய்வதற்கு எந்த தடையும் இல்லை. ஹிந்தி பிரச்சார சபா தமிழ்நாட்டில் வியாபித்திருக்கிறது. அதற்கு எந்த தடையும் இல்லை.

தமிழ்நாடு அரசு நடத்தும் அரசுப் பள்ளிகளில் இந்தி மொழி கற்றுக் கொடுக்க, ஆசிரியர்களை நியமிக்க, அவர்களுக்கு சம்பளம் கொடுக்க இந்தி பேசும் மாநிலங்கள் பொறுப்பேற்றுக் கொள்ளுமா? நாம் அந்த மாநிலங்களில் தமிழை கற்றுக் கொடுக்க பொறுப்பேற்றுக் கொண்டால் அவர்கள் கற்றுக் கொடுக்க ஆயத்தமாக உள்ளார்களா? இதற்கெல்லாம் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதாப் பதில் தருவாரா?

---

புதிய கல்விக்கொள்கை தமிழ்நாட்டுக்குத் தேவையில்லை! இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!

# இரு மொழிக்கொள்கையே எங்கள் கொள்கை! கழகத் தலைவர்- முதல்வரின் கட்டளையை ஏற்று களம் காணவும் தயாராவோம்!

## அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் தலைமையில் நடைபெற்ற கழக இலக்கிய அணிக் கூட்டத்தில் தீர்மானம்!



*சென்னை, பிப்.23-*

*அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற கழக இலக்கிய அணியின் நிர்வாகிகள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-*

*1. சமூக நீதியை காப்பதில் இந்தியாவிற்கே வழிகாட்டியாக திகழ்ந்து தன் ஆளுமைத் திறனால் முதல்வருக்கெல்லாம் முதல்வராக விளங்கி வரும் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் பிறந்த நாளை மார்ச் 1 முதல் மக்கள், கழக முன்னோடிகள், தமிழ் சான்றோர்கள் பயன்பெறும் வண்ணம் நலத்திட்டங்கள் வழங்கி கொண்டாடுவது என்று கழக இலக்கிய அணி தீர்மானிக்கிறது.*

### ஒன்றிய கல்வி அமைச்சருக்கு கண்டனம்!

*2. பேரறிஞர் அண்ணா அவர்களின் இருமொழிக் கொள்கையில் என்றென்றும் திராவிட மாடல் அரசு உறுதியாக இருக்கும் என்றும் ஒன்றிய பா.ஜ.க. அரசும், அமைச்சர் தர்மேந்திர பிரதானும் மும்மொழி கொள்கையை கண்டிப்பாக தமிழ்நாடு அரசு ஏற்றுக் கொள்ள வேண்டும். இல்லையேல் கல்விக்கான தர வேண்டிய நிதியை தர மாட்டோம் என்று கூறுவதை கழக இலக்கிய அணி கடுமையாக கண்டிக்கிறது.*

*3. மும்மொழிக் கொள்கையை எதிர்ப்பதென்றும், இருமொழிக் கொள்கையில் உறுதியாக திராவிட மாடல் அரசு இருக்குமென்றும் அதற்காக மீண்டும் மொழிப்போர் நடத்துவதற்கு தேவை ஏற்படுமானால் அதற்கும் தயார் என்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் முழக்கத்திற்கு துணையாக என்றென்றும் இருப்போம் என்றும் அவர் போர்க்களம் புகுந்தால் நாங்கள் முதல் போராளிகளாக களம் இறங்கி தமிழ் மொழி காத்து இந்தி மொழி திணிப்பை என்றும் எதிர்ப்போம் எனவும் கழக இலக்கிய அணி உறுதியேற்கிறது.*

### துணை முதல்வருக்கு துணை நிற்போம்!

*4. சனாதனத்தை என்றும் எதிர்ப்போம் என்று உறுதியோடு இருக்கும் கழக இளைஞரணி செயலாளர் துணை முதல்வர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் போர்க்குணத்தை கழக இலக்கிய அணி பாராட்டுவதோடு என்றென்றும் அவருக்கு கழக இலக்கிய அணி துணை நிற்கும் என உறுதியேற்கிறது.*

*5. கழகத் தலைவர் முதல்வர் தளபதி அவர்களின் விருப்பப்படி ஈரோடு இடைத்தேர்தலில் பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் கழகம் வென்றதைப் போல் 234 தொகுதிகளிலும் கழகம் மற்றும் கூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற இந்நாளிலிருந்து கடும் பணி ஆற்றுவோம் என்று கழக இலக்கிய அணி சபதமேற்கிறது.*

*6. பேரிடர் நிவாரணநிதியை மற்ற மாநிலங்களுக்கெல்லாம் வழங்கிய ஒன்றிய மைனாரிட்டி அரசு தமிழகம் கேட்ட ரூ.45,000 கோடியில் வெறும் ரூ.276 கோடியை மட்டும் வழங்கிவிட்டு மேலும் பேரிடர் நிதி வழங்காமல் தமிழ்நாட்டை வஞ்சிப்பதை கடுமையாக கண்டிப்பதோடு மோசமான நிதி நெருக்கடியிலும் திட்டங்கள் தருவதோடு பெஞ்சால் புயலால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 500 கோடி நிவாரணம் வழங்கிய முதல்வர் அவர்களை கழக இலக்கிய அணி நன்றியுடன் வணக்குகிறது.*

### தமிழ் மொழியை காத்திடும் முதல்வரை வணங்குவோம்!

*7. ஹரியானா போன்ற வடமாநிலங்களில் தமிழ் மொழி வளர்ச்சி அமைப்பு ஏற்படுத்தி தமிழ் மொழி வளர்ச்சிக்கு பல லட்சம் நிதியளிக்கும் முதல்வர் அவர்களை கழக இலக்கிய அணி வணங்கி நன்றி பாராட்டுகிறது. மேலும் போதை ஒழிப்பில் கடும் நடவடிக்கை எடுத்து எதிர்கால தமிழ்ச் சமுதாயத்தை காத்திடும் கருணையுள்ளம் கொண்ட முதல்வர் அவர்களை கழக இலக்கிய அணி வணங்குகிறது.*

*8. அரசியல் விளம்பரத்திற்காக அன்றாடம் அறிக்கை விடும் பா.ஜ.க. அண்ணாமலை தான் அரசியலில் ஒரு அரைவேக்காடு என்பதை அறியாமல் அண்ணா அறிவாலயத்தின் செங்கல்லை உருவுவேனென்றும் சகோதரர் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மிரட்டல் விடுத்தும் பேசி வருகிறார். அண்ணாமலைக்கு உண்மையிலேயே துணிச்சல் இருந்தால் அறிவாலயத்தின் அருகே அண்ணாசாலைக்கு வந்து பார்க்கட்டும் என்றும் இப்படி பேசுவதை உடனே அவர் நிறுத்திக்கொள்ள வேண்டும் இல்லையென்றால் தமிழ்நாட்டில் அண்ணாமலையை நடமாட விடமாட்டோம் என்று எச்சரிக்கிறோம் என கழக இலக்கிய அணி கண்டனம் தெரிவிக்கிறது.*

### தமிழ்நாட்டை வஞ்சிக்கும் மோடிக்கு கண்டனம்!

*9. நிதியை தராமல் திராவிட மாடல் அரசையும் தமிழ்நாட்டையும் வஞ்சிக்கும் பிரதமர் மோடியின் மைனாரிட்டி பா.ஜ.க. அரசை கடுமையாக கண்டிப்பதோடு இந்தியை திணிக்க முயலும் அடாவடித்தனத்தை பா.ஜ.க. ஒன்றிய அமைச்சர்கள் நிறுத்திக் கொள்ள வேண்டுமென்று எச்சரிப்பதோடு அவர்கள் தமிழ்நாட்டிற்குள் வந்தால் கடுமையான விளைவுகளை சந்திக்க நேரிடும் என்றும் கழக இலக்கிய அணி எச்சரிக்கை விடுக்கிறது.*

*இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

*தலைமை : வி.பி.கலைராஜன், (செயலாளர், கழக இலக்கிய அணி) சிறப்பு அழைப்பாளர் டி.கே.இ.எஸ். இளங்கோவன், (செய்தி தொடர்பு தலைவர்).*

*வரவேற்புரை : திராவிட மணி, தொகுப்பாளர் : நந்தனம் நம்பிராஜன்*

*முன்னிலை : தென்னவன், கே.எஸ்.எம்.நாதன், இறைவன், உத்திராபதி, சேவகபெருமாள், தசரதன், செந்தில், ஸ்ரீதர், நேருபாண்டியன், கலைசெல்வன், சௌமியன், நாகநாதன், பிரம்மபுரம் பழனி*

*நன்றியுரை : நா.சந்திரபாபு*

*இதில் மாவட்ட - மாநகர அமைப்பாளர் கலந்து கொண்டனர்.*

---

தமிழ்நாட்டுக்கு கல்வி நிதியை தர மறுக்கும்

# ஒன்றிய கல்வி அமைச்சரைக் கண்டித்து கருப்புப் பட்டை அணிந்து போராட்டம்!

## அரசு ஊழியர்கள் – ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிவிப்பு!



*சென்னை, பிப். 23 -*

*அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஒதுக்கிய நிதி ரூ 2152 கோடியை தேசி கல்விக் கொள்கையை எற்றால் மட்டுமே விடுவிக்க முடியும் என ஒன்றிய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் பேச்சை கண்டித்து தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் ஒருவாரம் கருப்பு பட்டை அணிந்து போராட்டம் என நிறுவனத் தலைவர் சா.அருணன் அறிவித்துள்ளார்.*

*அவரது அறிவிப்பு வருமாறு:-*

*ஒன்றிய அரசு அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் சார்பில் ஒதுக்கீடு செய்த சுமார் ரு 2152 கோடியை விடுவிக்காமல் தமிழகத்தை வஞ்சிக்கிறது அதாவது ஒன்றிய அரசு கொண்டு வந்துள்ள மும்மொழி கொள்கையான புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டிலும் அமல்படுத்த வேண்டும் அப்படி அனுமதித்தால் மட்டுமே நிதியை விடுவிக்க இயலும் என்று தெரிவித்து ஏற்கனவே நிதியை குஜராத் திற்கும் உத்திரபிரதேச மாநிலத்திற்கும் மடைமாற்றம் செய்து ஒர வஞ்சனை செய்துள்ளது*

*அனைவருக்கும் கல்வி இயக்கத்தின் மூலமாக தான் 12 ஆயிரம் பகுதிநேர சிறப்பாசிரியர்கள், ஆசிரியர் பயிற்றுனர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் பராமரிப்பு ஆசிரியர்கள் என 15 ஆயிரம் ஆசிரியர்களின் ஊதியம் வகுப்பறை கட்டடங்கள், கட்டடங்கள் பழுது பாரத்தல் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள், ஆசிரியர்களுக்கான அனைத்துவகை பயிற்சிகள் மேற்கொள்ள இந்த நிதியை தான் பயன்படுத்துகின்றனர் ஆனால் ஒன்றிய அரசு மும்மொழிக் கொள்கையான புதிய கல்விக் கொள்கையை தமிழ்நாட்டில் அமல்படுத்தினால் மட்டுமே ரூ.2152 கோடியை விடுவிக்க இயலும் என தெரிவித்து நிதியை உத்திரப் பிரதேசம் மற்றும் குஜராத் மாநிலங்களுக்கு மடைமாற்றம் செய்து மிரட்டுகிறது,*

*இது எதனால் என்றால் இந்தியையும் சமஸ்கிருத மொழியையும் தமிழ்நாட்டில் கொண்டுவந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் மாணவர்கள் நலனில் தாய் தந்தைக்கு நிகராக காலை உணவு திட்டம் ,மேற்படிப்பில் சாதித்து பல துறைகளில் வேலையாப்பு பெற நான் முதல்வன் திட்டம் , புதுமை பெண் திட்டம் கல்லூரி கனவு , தமிழ் புதல்வன் திட்டம் உள்ளிட்ட பல திட்டங்களை கொண்டு வந்து இந்தியாவின் முதன்மை முதலமைச்சர் என்பதை பறைச்சாற்றுகின்றார்*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வடிவமைத்து செயல்படுத்தி வரும் திட்டங்களை தடுத்து நிறுத்தி தமிழ்நாட்டு மாணவர்களையும் இளைஞர்களின் கல்வியை சீரழித்து தமிழ்நாட்டு கல்வித்தரத்தை சிதைத்து சின்னாபின்னமாக்க நினைக்கிறது ஒன்றிய அரசு ,*

*மாற்றான் தாய் மனப்பான்மை எண்ணத்தில் பி.எம்.ஸ்ரீ திட்டத்தின் கீழ் தமிழ்நாட்டிற்கு சேர வேண்டிய ரூ. 2152 கோடியை உத்திரபிரதேசம் மாநிலத்திற்கும் குஜராத் மாநிலத்திற்கும் மடை மாற்றம் செய்ததை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் வன்யாமைக கண்டிக்கிறோம்.*

*மேலும் ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் புதிய கல்விக் கொள்கையை என்றால் மட்டுமே நிதியை ஒதுக்க முடியும் என்ற அறிவிப்பு ஒன்றிய அரசின் அடாவடித் தனத்தை பறைச்சாற்றுகிறது. இதை தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு வன்மையாக கண்டிக்கிறது.*

*மேலும் மடை மாற்றம் செய்து உத்திரபிரதேச மாநிலத்திற்கும் குஜராத் மாநிலத்திற்கும் ஒதுக்கப்பட்ட நிதியை திரும்ப பெற்று அந்த நிதியை உடனே தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ்நாடு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பு சார்பில் இன்று முதல் ஒரு வாரக் காலத்திற்கு கருப்புப் பட்டை அணிந்து பணிக்கு செல்வார்கள் , அப்படியும் செவிக் கொடுக்காத படசத்தில் அனைத்து சங்கங்கள் சார்பில் போராட்டங்களை நடத்துவோம் என்பதை தெரித்துக் கொள்கிறேன்.*

*இவ்வாறு சா.அருணன் அறிவித்துள்ளார்.*



செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருத்துவத்துறை சார்பில் மேற்கு தாம்பரம் கல்யாண் நகர் மாநகராட்சி அரசு உயர்நிலை பள்ளியில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாமை தாம்பரம் மாநகர செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., துவக்கி வைத்தார். உடன் மாநகர மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர்.கோ.காமராஜ், மண்டல குழு தலைவர் டி.காமராஜ், மாமன்ற உறுப்பினர்கள், வட்ட கழக செயலாளர்கள் மற்றும் கழக தோழர்கள் உடனிருந்தனர்.